OS.116/2012 13.03.2023

வாதி சாட்சி.1 (வேலு) – சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. வழக்கு சொத்து அரசு புறம்போக்கு சொத்து என்றால் சரிதான். அது கடலூர் நகராட்சியில் தான் இருக்கிறது என்றால் சரிதான். நகராட்சியில் இருக்கும் எல்லா சொத்தையும் பராமரிப்பது நகராட்சி தான் என்றால் சரிதான். அந்த சொத்தில் நாங்கள் 3 தலைமுறைகளாக உள்ளோம் எத்தனை வருடங்களா என்றால் வருடம் சொல்ல முடியாது. புறம்போக்கு சொத்தை அனுபவித்தால் பட்டா வாங்கவேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியும். பட்டா வாங்கிவிட்டேனா என்றால் பட்டா கொடுக்கவில்லை நிலுவையில் உள்ளது.
2. பட்டா வழங்கப்படவில்லை என்றால் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நகராட்சிக்கு முழு அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு போடுவதற்கு 6 மாதத்திற்கு முன்பு தான் ஆக்கிரமிப்பு செய்தோம் என்றால் சரியல்ல. 6 மாதங்களாக வழக்கு சொத்தை அபகரித்ததால் பட்டா கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதித் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.